# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண்.255/2013

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சிவகாமி | மதம் | .. இந்து |
| கணவர் பெயர் | .. முனியப்பன் | தொழில் | .. கூலிவேலை |
| வயது | .. 55 | ஜாதி | .. வன்னியர் |
| கிராமம் | .. தப்பக்குட்டை | நாள் | .. 30.01.2020 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

பி.சா.2 - சிவகாமி – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

இந்த வழக்கை யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், எனது சின்ன தாத்தா வகையறாவான கந்தசாமி எனது அப்பா மீது தாக்கல் செய்துள்ளார். என்ன சர்வே எண்ணில் உள்ள எவ்வளவு விஸ்தீரண நிலத்திற்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், காட்டு நெம்பர் தெரியாது, ஆனால் ஏக்கர் 1.26 1/2 செண்ட் நிலத்திற்கு போட்டுள்ளார்கள். இந்த சொத்து எனது முப்பாட்டனாரான சின்னப்பக்கவுண்டரின் பரம்பரை சொத்து என்றால், சரிதான். அவருக்கு வீராச்சாமிக்கவுண்டர் மற்றும் அம்மாசி என்ற இரண்டு மகன்கள் என்றால், சரிதான். தற்போது மேற்கண்ட நபர்கள் இருவரும் உயிருடன் இல்லை என்றால், சரிதான். மேற்கண்ட வீராச்சாமிக்கு லட்சுமி, வேங்கையம்மாள், பெருமாயி என்ற மூன்று மகள்களும், எனது தகப்பனாரும், அவருடைய தம்பி அர்த்தனாரி (1, 2 பிரதிவாதிகள்) ஆகியோர் மகன்கள் என்றால், சரிதான். வீராச்சாமியின் வாரிசுதாரர்கள்தான் இந்த வழக்கின் எதிர்தரப்பினர் என்றால், சரிதான். எனது தகப்பனாரான 1-ஆம் பிரதிவாதிக்கு 3 மகள்கள், 1 மகன் என்றால், சரிதான். நான் தாவா சொத்திற்கு பக்கத்திலேயே இருக்கிறேன் என்றால், சரிதான். நான் எனது சொத்திலோ, இந்த தாவா சொத்திலோ இல்லாமல், வாடகை வீட்டில் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். அம்மாசிக்கவுண்டருக்கு கோவிந்தசாமி, சின்னையன், கந்தசாமி, பொன்னுசாமி மற்றும் ரங்கநாதன் என்ற 5 மகன்கள் என்றால், சரிதான். மேற்கண்ட அம்மாசிக்கவுண்டரின் வாரிசுதாரர்கள்தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால், சரிதான். எனது தாத்தா வீராச்சாமிக்கவுண்டர் 1934 ஆம் ஆண்டு ஒரு தொட்டண்ணச்செட்டியார் மகன் மாரிச்செட்டியார் என்பவருக்கு தனது பங்கு முழுவதையும் விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால், இல்லை,

கொதவுதான் வைத்திருந்தார், அதை என் அப்பா மீட்டுவிட்டார். கொதவு தான் வைத்தார், அதை மீட்டுவிட்டார் என்று சொல்வதற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால், இல்லை எனது அப்பா என்னிடம் சொன்னார். எனக்கு 55 வயதாகிறது, எனவே 1934 ஆம் ஆண்டு என்ன நடந்தது என்று நேரில் தெரியாது என்று சொன்னால், சரிதான், எனது தகப்பனார் சொல்லித்தான் தெரியும். 1943-ஆம் வருடம் மேற்கண்ட மாரிச்செட்டியார் வாதிகளின் குடும்பத்தாருக்கு எனது தாத்தா விற்பனை செய்த சொத்தை, விற்பனை செய்துவிட்டார்கள் என்றால், இல்லை, எனது தாத்தா மீட்டு விட்டதாக எனது அப்பா என்னிடம் சொன்னார். நான் படித்துள்ளேனா என்றால், இல்லை. பொதுவாக ஒரு சொத்தை குதவை வைத்தாலோ, மீட்டுக்கொண்டாலோ அது சம்பந்தமாக பத்திரம் எழுதி பதிவு செய்து கொள்வது வழக்கம் என்றால், இல்லை. நான் கூறுவது போல், குதவை வைத்தால் பத்திரம் எழுதிக்கொடுப்பது வழக்கம் இல்லை என்று சொல்கிறேன், ஆனால், எனது பாட்டனார் மாரிச்செட்டியாருக்கு பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், அவ்வாறு பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை. உண்மைகள் எனக்குத்தெரியும், ஆனால் அதை ஒப்புக்கொண்டால், அது எங்களது வழக்கிற்கு விரோதமாக அமைந்துவிடும் என்பதால், உண்மைகளை மாற்றிச் சொல்கிறேன் என்றால், சரியல்ல. அதேபோல், இந்த வழக்கில் தாவா சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களுக்கு விரோதமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், நான் அப்படி சாட்சி சொல்லவில்லை. அடமானம் வைத்த சொத்தை மீட்டுவிட்டதாக சொல்கிறீர்கள் அவ்வாறு எனில் அந்த சொத்தை நாங்கள்தான் அனுபவிக்கிறோமா என்றால், எனது தகப்பனார் அனுபவிக்கிறார், அது எத்தனை ஏக்கர் நிலம் என்றால், ஏக்கர் தெரியாது, ஆனால் நான்கு இடத்தில் இருக்கிறது. நான் சொல்லும் நான்கு இடங்கள் கருப்பேழங்காடு, கம்மாளங்காடு, சந்தைபிரான் காடு, கம்மாளனூர் ஆகிய இடங்களா என்றால், ஆமாம். மேற்கண்ட நான்கு ஊர்களும் வெவ்வேறு இடங்களில் தான் உள்ளது என்றால், சரிதான். இந்த தாவா சொத்து கருப்பேழங்காட்டில் உள்ளதா என்றால், ஆமாம். நான் சொன்ன மேற்கண்ட நான்கு ஊர்களில் எந்தவொரு இடத்திலும் வீராச்சாமியின் வகையறா குடியிருக்கவில்லை என்று சொன்னால், சரிதான், பூச்சிரெட்டியூரில் இருக்கிறோம். மேற்கண்ட ஊரில்தான் எனது அப்பாவும், எனது சித்தப்பாவும் இருக்கிறார் என்றால், சரிதான். எனது தகப்பனார் எங்கு குடியிருக்கிறாரோ அதே இடத்தில்தான் எனது தாத்தா வீராச்சாமியும் குடியிருந்தாரா என்றால், ஆமாம். எனவே மேற்கண்ட கருப்பேழங்காடு,

கம்மாளங்காடு, சந்தைபிரான் காடு, கம்மாளனூர் ஆகிய இடங்களில் எனது தாத்தாவோ, எனது தகப்பனாரோ எந்தவொரு காலத்திலும் குடியிருக்கவும் இல்லை, அனுபவிக்கவும் இல்லை என்று சொன்னால், சரியல்ல, எல்லா இடத்திலும் நாங்கள் அனுபவித்து வருகிறோம். தற்போதும் நாங்கள் அனுபவித்து வருகிறோமா என்றால், ஆமாம். அதாவது, எனது தாத்தா வீராச்சாமி காலத்திலிருந்து அனுபவித்து வருகிறோமா என்றால், ஆமாம். எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் ரொம்ப நாளைக்கு முன்பாக இறந்துவிட்டார், வருடம் தெரியவில்லை. நான் கூறுவது போல் எனது தாத்தா காலத்திலிருந்து மேற்கண்ட சொத்துக்களை அனுபவித்து வந்திருந்தால், அதற்குரிய ஏதேனும் ஒரு ஆவணம் எங்களிடத்தில் இருக்கும், அதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம், அவ்வாறு அனுபவிக்கவில்லை என்பதால்தான் எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆதாரம்தான் பொதுவாக உள்ளது. நான் கூறுவது போல், பொதுவான ஆவணம் எதுவும் இல்லை, எனது தகப்பனாரும் அதை தாக்கல் செய்யவில்லை என்றால், அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் கூறுவது போல் பொதுவில் எந்தவொரு ஆவணமும் இல்லை, ஆனால் இருப்பதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், நான் பொய் சொல்லவில்லை. நான் சொல்கிறது மாதிரி இல்லை, தாவா சொத்து இல்லாமல் கருப்பேழங்காடு, கம்மாளங்காடு, சந்தைபிரான் காடு, கம்மாளனூர் ஆகிய இடங்களையும் இந்த வாதிகள் வகையறாதான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், இல்லை, எனது அப்பா மட்டும்தான் அனுபவித்து வருகிறார். நான் கூறுவதுபோல் எனது தாத்தா குதவை வைக்கவில்லை, அதனால்தான் 1943 ஆம் ஆண்டு கிரையத்தை தனது வாழ்நாளில் வீராச்சாமிக்கவுண்டர் மறுத்துக்கூறவில்லை, அது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால், அது பொய். அது பொய் என்று சொல்கிறீர்கள், எனது தாத்தா வீராச்சாமிக்கவுண்டர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால், எனது தாத்தா பெயரில் பட்டா இருக்கிறது, எனது தகப்பனார் அனுபவித்து வருகிறார். எங்களுக்கு எவ்வித ஆவணமும் இல்லை என்பதால்தான் இந்த தாவா சொத்து சம்பந்தமான பட்டாவில் எனது தாத்தா பெயரைசேர்த்தி அவரின் வாரிசு என்ற கோதாவில் இந்த பிரதிவாதிகளின் பெயரை சேர்த்துக்கொண்டு, இந்த வாதிகளுக்கு இடையூறு செய்யவேண்டும் என்று நாங்களாகவே பட்டாவில் டைப் செய்து கொண்டோம் என்றால், அப்படி இல்லை. அவ்வாறு மோசடியாக பெயரை சேர்த்துக்கொண்டது சம்பந்தமாக சேலம் நில மோசடி காவல்துறையில் வழக்கு

நடக்கிறது, அந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்தில் எனக்கோ, எனது தாத்தாவிற்கோ எவ்வித உரிமையும் இல்லை, 1934-ஆம் ஆண்டிலிருந்து இந்த வாதிகளின் குடும்பத்தினர்தான் அனுபவித்து வருகின்றனர் என்றால், இல்லை. வாதிகள் அனுபவித்து வருவதால்தான் காலகிரமமாக வாதிகள் பெயரில் தொடர்ச்சியாக ஆவணங்கள் வருகிறது, நாங்கள் ஏற்படுத்திக்கொண்டதுபோல், அவர்கள் எந்த ஆவணத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால், அப்படி இல்லை. எனது தாத்தா மாரிச்செட்டியார் பெயருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் தேதியோ, மாரிச்செட்டியார் அம்மாசி குடும்பத்திற்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் தேதியோ தெரியாது என்று சொன்னால், சரிதான். ஆனால், எனது பிரமாணப்பத்திரிக்கையில் மேற்கண்ட தேதிகளை புள்ளிவிபரமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம், எனது வக்கீல்தான் எழுதிக்கொடுத்தார், நான் விபரத்தை மட்டும்தான் சொன்னேன், தேதியை அவரே ஏற்படுத்திக்கொண்டார். பிரமாணப்பத்திரிக்கையில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியாது, ஆனால் எனது தகப்பனாருக்கு அனுசரணையாக சொல்லவேண்டும் என்பதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், எனக்கு விபரம் தெரியும், நான் பொய் சொல்லவில்லை.

ஒப்பம் /சிவகாமி

ஒப்பம் / திருமதி.மு.பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.